தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 03.06.2026

**முன்னிலை**

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 7492/B/2023**

திரு.க.காட்டுத்துரை — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர்,
மாவட்ட விளையாட்டரங்கம்,
திண்டுக்கல் - 624 004. — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (03.06.2026) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.க.காட்டுத்துரை அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு.இரா.சிவா, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், மாவட்ட விளையாட்டரங்கம், திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர் 24.04.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (03.06.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 28.01.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ், திண்டுக்கல் மாவட்ட விளையாட்டுத் துறை அலுவலர் அவர்கள் ஊருக்கு விளையாட்டு மைதானம் மற்றும் அளித்துள்ள தகவல்கள்படி, விளையட்டு மைதானம் மற்றும் உடற்பயிற்சி கூடம் அமைந்துள்ள இடத்தின் வரைபட நகல், அமைக்கப்பட்ட இடத்தின் சர்வே எண், கொண்ட பட்டா நகல், விளையாட்டு மைதானத்தின் மதிப்பீடு மற்றும் செலவு தொகை விவரங்கள் அமைக்கப்பட்ட ஆண்டு திட்டம் ஆகிய விவரங்கள் வழங்கக்கோரி தாக்கல் செய்த மனு மற்றும் 17.03.2023 அன்று சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கோரிக்கடவு கிராமத்தில் வசித்து வருவதாகவும், தங்கள் ஊருக்கு விளையாட்டு மைதானம் வேண்டி பலமுறை மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால், முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு புகார் அளித்ததன் பேரில், திண்டுக்கல் மாவட்ட விளையாட்டுத் துறை அலுவலர் அவர்கள் தங்கள் ஊருக்கு ஏற்கனவே விளையாட்டு

மைதானம் மற்றும் உடற்பயிற்சி கூடும் அமைத்து தரப்பட்டுள்ளது என்று தகவல் அளித்துள்ளார். மேற்படி தகவலின் அடிப்படையில், விளையட்டு மைதானம் மற்றும் உடற்பயிற்சி கூடம் அமைந்துள்ள இடத்தின் வரைபட நகல், அமைக்கப்பட்ட இடத்தின் சர்வே எண், கொண்ட பட்டா நகல், விளையாட்டு மைதானத்தின் மதிப்பீடு மற்றும் செலவு தொகை ஆகிய விவரங்களை வழங்க கோரி மனு தாக்கல் செய்ததாகவும், நாளதுவரை உரிய தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் தங்கள் பொது அதிகார அமைப்புச் சார்ந்த தகவல்கள் அல்ல என்றும், ஆகவே 02.02.2023ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக, கோரிக்கடவு பகுதியில் அம்மா இளைஞர் விளையாட்டு திட்டத்தின் கீழ் கிராம பஞ்சாயத்துக்களில் அமைக்கப்பட்ட விளையாட்டு மைதானங்களின் விவரங்களை இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு, தலைவர், கோரிக்கடவு கிராம பஞ்சாயத்து, பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம் அவர்களுக்கு கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டது என்றும், அதனை தொடர்ந்து, 12.04.2023ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும், 01.06.2026ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலர், 2019-2020ஆம் ஆண்டு தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோரிக்கடவு ஊராட்சியில், அம்மா ஊரக இளைஞர் விளையாட்டு மைதானங்களான கைப்பந்து மைதானம் அமைத்தல், கபாடி மைதானம் அமைத்தல் மற்றும் கிரிக்கெட்ட பயிற்சி தளம் அமைத்தல் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வரப்பெற்றது என்றும், தமிழ்நாடு விளையட்டு மேம்பாட்டு ஆணையத்தால் தங்களது அலுவலகம் மூலம் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு கோரிக்கடவு ஊராட்சி மூலம் பெறப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், கைப்பந்து, கபாடி மற்றும் கிரிக்கெட் விளையாட்டு மைதானங்கள் அமைக்கும் பொருட்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணியாளர்களைக் கொண்டு முட்புதர் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து, ஊராட்சியில் சில நபர்கள் நிலம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவித்ததைத் தொடர்ந்து அடுத்தகட்டப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், இப்பணிகளுக்கான மூலப்பொருட்களுக்கான தொகை எதுவும் விடுவிக்கப்படவில்லை, மேற்படி ஊராட்சியில் அம்மா விளையாட்டு மைதானம் அமைக்கப்படவில்லை என்றும் தகவல் அளித்துள்ளார் என்றும் எடுத்துரைத்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

5. விசாரணையில் ஆஜரான மனுதாரர் இத்தகவல் தனக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவித்ததை தொடர்ந்து, விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு நேரடியாக தகவல்களை சார்வு செய்தார், மனுதாரரும் தகவல்கள் பெற்றுக்கொண்டு, போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஏற்பளிப்புச் செய்தார். இதனை இவ்வாணையம் பதிவு செய்கின்றது.

6. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில், ஆவணங்களின் அடிப்படையில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் கருத்தில் கொண்டு, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகின்றது.

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 7492/B/2023**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்
நலன் அலுவலர்,
மாவட்ட விளையாட்டரங்கம்,
திண்டுக்கல் - 624 004.

திரு.க.காட்டுத்துரை,
1/56, வடக்குத் தெரு,
கோரிக்கடவு நரிக்கல்பட்டி அஞ்சல்,
பழனி தாலுகா,
திண்டுக்கல் - 624 618.

Copy to: File
Sj/Ps- 05/06/2026